**அசல் வழக்கு எண்.2/2019**

**தேதி: 25.02.2025.**

**வா.சா.1: 18.02.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**சாட்சி பெயர்- திரு. K.G.T. கௌதமன், த/பெ. திருநாவுக்கரசு**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் சென்னையில் வசிக்கிறேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். அதுமட்டுமல்லாமல், ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிரம்மதேசம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரையம் செய்து கொடுப்பதற்காக தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா கிராமத்தில் வேறு ஏதாவது சொத்து உள்ளதா என்றால் இல்லை.

தாவா கிராமத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தம் என்றால் விவசாயம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் நிலம் வாங்குவதற்காக தான் அந்த கிராமத்திற்கு வந்தேன். தாவா சொத்து விற்பனைக்கு உள்ளது என்பதை யார் என்னிடம் கூறினார் என்றால் புரோக்கர் கூறினார். தாவா சொத்தை நான் நேரில் வந்து பார்வையிட்டேன். தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் ஓரளவு பார்த்தேன், மீதமுள்ள ஆவணங்கள் வங்கியிலும் கிராம நிர்வாக அலுவலரிடமும் உள்ளது , அதை பிறகு வாங்கி தருகிறேன் என்று கூறினார்.

தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 12.38 செண்ட். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தேன். வில்லங்கம் பார்த்த போது, தாவா சொத்தில் வில்லங்கம் ஏதாவது இருந்ததா என்றால் ஒரு குறிப்பிட்ட சர்வே எண்களின் பேரில் மட்டும்

சொசைட்டியில் லோன் வாங்கியிருந்தார். மேற்சொன்ன அந்த வில்லங்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

10.04.2017ல் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள் இருவரும் கிரைய ஒப்பந்தத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன அந்த கிரைய ஒப்பந்தத்தில் தாவாவில் கண்டுள்ள சொத்து முழுவதும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.